02

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 12
## கணக்கீட்டு சமன்பாடு

BUSINESS & COMMERCE BRANCH

1. பின்வரும் தகவல்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

    1) கடந்த கால நிகழ்வின் பிரதிபயனாக உருவாகி எதிர்காலத்தில் பொருளாதார பயன்கள் உட்பாய்ச்சப்படுவதும் நிறுவனத்தில் கட்டுபடுத்தப்படுதுமான வளம் சொத்தாகும். (        )
    2) பணத்தினால் அளவிடக்கூடியதும், அளவிடமுடியாததுமான வளங்கல் தொடர்பான தகவல்களை வழங்குவது பண அளவீட்டு எண்ணக்கருவாகும். (        )
    3) நிறுவனத்தின் உரிமையாளரினால் நிறுவனத்தில் ஈடுபடுத்தப்படும் வளம் மூலதனமாகும். (    )
    4) நிதியாண்டின் முடிவில் சொத்து, பொறுப்பு, உரிமை எனபவற்றைக் கொண்டு வருமானக் கூற்றை தயாரிக்க முடியும். (        )

2. இடைவெளி நிரப்புக.

    1) உரிமையாளரின் பங்களிப்பு இல்லாமல் உரிமையில் ஏற்படும் அதிகரிப்புக்கு காரணமான பொருளாதார நலன்களில் ஏற்படும் அதிகரிப்பு ……………………… எனப்படும்.
    2) நிறுவனத்தை அதன் உரிமையாளரால், மற்றும் வேறு பிரிவினர்களிடமிருந்து வேறுபடுத்தி இணங்காட்டுவது …………………………….. எண்ணக்கருவாகும்.
    3) உரிமையாளர் தனது சொந்த தேவைக்கு நிறுவனத்தில் இருந்து எடுக்கும் வளங்களின் பெறுமதி ……………………….. என அழைக்கப்படும்.
    4) கடந்தகால கொடுக்கல் வாங்களின் பயனாக உருவாகி, வளங்கள் வெளிப்பாச்சப்படுவதும் நிகழ்கால கடப்பாடும் கொண்டதுமானது ……………………… ஆகும்.

    (வருமானம், வியாபார அலகுசார், பற்று, பொறுப்பு)

3. சுருக்கமான விடை தருக.

    1) சொத்து என்று குறிப்பிடுவது?

    2) நிறுவனத்தின் பொறுப்பு குறைந்து உரிமை அதிகரிப்பது தொடர்பான கொடுக்கல் வாங்கலொன்றை பெறுமதியுடன் தருக.

4. பின்வரும் தகவல்கள் ரூபி வியாபாரத்துடன் தொடர்புடையது.

| | 2021.01.01 | 2022.01.01 |
|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 |
| மொத்த சொத்து | 500 | 800 |
| மொத்த பொறுப்பு | 200 | 400 |

வருடத்தினுள் உரிமையாளரால் ரூ50000 காசு முதலீடு செய்யப்பட்டது. 2021.12.31 முடிவடைந்த வருடத்துக்கான நிறுவனத்தின் இலாபம் எவ்வளவு?

5. பின்வரும் சமன்பாட்டில் சரியான கணக்கீட்டு சமன்பாடானது,

1) உரிமை + பொறுப்பு = சொத்து + வருமானம்
2) வருமானம் − செலவு + உரிமை = சொத்து + பொறுப்பு
3) உரிமை + சொத்து = சொத்து + பொறுப்பு
4) உரிமை – வருமானம் + பொறுப்பு = சொத்து + செலவு
5) உரிமை + வருமானம் + பொறுப்பு= சொத்து + செலவு

வினா இல 6,7 க்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்தவும்.

சிவா மூலம் பட்டியலிட்ட விலை ரூ250000க்கு பண்டங்கள் சிசிரவுக்கு விற்கப்பட்டது. அதில் 10% வியாபாரக் கழிவு வழங்கப்பட்டது. இப்பண்டங்களின் கிரயம் ரூ.140000 ஆகும். சிசிரயால் விற்பனை விலை ரூ.40000 (கிரயம் ரூ.28000) ஆன பண்டங்கள் திருப்பி அனுப்பப்பட்டது. 10% கழிவுடன் சிசிர காசு முழுமையாக செலுத்தினார்.

6. இக் கொடுக்கல் வாங்கல் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் யாது?

| | சொத்து | = | பொறுப்பு | + | உரிமை |
|---|---|---|---|---|---|
| (1) | + 250,000<br>- 250,000 | = | 0 | + | 0 |
| (2) | + 225,000<br>- 250,000 | = | -25,000 | + | 0 |
| (3) | + 62,500 | = | +62500 | + | 0 |
| (4) | - 225,000<br>+ 225,000 | = | 0 | + | 0 |
| (5) | + 250,000<br>- 225,000 | = | 0 | + | 0 |



BUSINESS & COMMERCE BRANCH

7. பின்வரும் நிகழ்வுகளில் கழிவை கணக்குகளில் பதிவதற்கான சரியான இரட்டை பதிவு,

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1) | பெற்ற கழிவு | 25000 | |
| | வியாபார செம்மதி | | 25000 |
| 2) | வியாபார செம்மதி | 25000 | |
| | பெற்ற கழிவு | | 25000 |
| 3) | கொடுத்த கழிவு | 22500 | |
| | வியாபார வருமதி | | 22500 |
| 4) | கொடுத்த கழிவு | 22500 | |
| | வியாபார வருமதி | | 22500 |
| 5) | வியாபார செம்மதி | 22500 | |
| | பெற்ற கழிவு | | 22500 |

8. சசி நிறுவனத்தின் பிரதான காரியாலயத்தின் மூலம் விற்பனை இன்றேல் திரும்புக என்ற அடிப்படையில் 2021.10.01 திகதி ரூ.600000 பெறுமதியான பண்டங்கள் கொலன்னாவ கிளைக்கு அனுப்பப்பட்டது. இருப்பு விற்பனையாக கருதி (கிரயம் ரூ.400000) கணக்கு பதிவாளரால் பதியப்பட்டுள்ளது. 2021.03.31 திகதியில் அந்த இருப்பில் 60% விற்கப்பட்டது என கொலன்னாவ கிளை முகாமையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய சமன்பாட்டின் தாக்கத்தை ஏற்படுத்துவது,

| | சொத்து | = | உரிமை (ரூ.000) | + | பொறுப்பு (ரூ.000) |
|---|---|---|---|---|---|
| 1) | +200 | = | +200 | + | 0 |
| 2) | +200 | = | + 0 | + | 0 |
| 3) | + 0 | = | +120 | + | 120 |
| 4) | +200 | = | + 0 | + | 200 |
| 5) | +120 | = | +120 | + | 0 |

9. ஏதாவதொரு வியாபாரமொன்றின் பற்று மற்றும் மேலதிக மூலதனம் இடப்படாவிடின் நிதியாண்டில் வியாபார நிறுவனத்தில் நட்டத்தை காட்டும் சந்தர்ப்பமாவது,

1) நிதியாண்டு முடிவில், மொத்த சொத்தை விட மொத்தப் பொறுப்பு அதிகரிக்கும் போது
2) நிதியாண்டினுள் மொத்த சொத்து குறையும் போது
3) நிதியாண்டினுள் மொத்த பொறுப்பு அதிகரிக்கும் போது
4) நிதியாண்டில் முடிவில் தொழிற்படு மூலதனம் அதிகரிக்கும் போது
5) நிறுவனத்தின் மொத்த பொறுப்பை விட மொத்த சொத்து அதிகரிக்கும் போது

BUSINESS & COMMERCE BRANCH

10. முறையாக கணக்குகளைப் பேணாத அஜித் நிறுவனத்தின் 2020.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் ரூ.6000000 ஆகும். 2020.03.31 திகதிக்கு உரிமை ரூ.8700000 ஆவதுடன் வருடத்தினுள் மேலதிக மூலதனமாக ரூ.400000 ஈடுபடுத்தியதுடன், வருடத்தில் பற்று ரூ.75000 ஆகும். 2019.04.01 திகதிக்கு மூலதனம் எவ்வளவு?

1) ரூ.2375000
2) ரூ.3025000
3) ரூ.8375000
4) ரூ.9025000
5) ரூ.14375000

BUSINESS & COMMERCE BRANCH